**STARTING TIME 11.30 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 172/2019**

Deposition of **P.W.4** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 20.01.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : கோவிந்தசாமி Father's Name : சூர்ய நாயக்கர்

Address : ஆயர்பாடி கிராமம், நெமிலி வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 70

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கை யார், மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், வாணி குடும்பத்தார்கள் வசந்தா, வெங்கடேசன் என்பவர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள். அவர்கள் இருவர் மீது மட்டும் தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், ஆமாம். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், கூட்டாக வாங்கிய சொத்தை வெங்கடேசன் என்பவர் மட்டுமே விற்பனை செய்துள்ளார், அதனால் பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எந்த சர்வே எண்ணில், எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தில் பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சர்வே எண் 245/1A–வில் உள்ள 50 செண்ட் நிலத்தில் பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது. அந்த 50 செண்ட் சொத்தில் மட்டும் தான் பாகம் கேட்கப்பட்டுள்ளதா என்றால், அந்த 50 செண்ட் நிலத்திலும், ஏரிக்கரையோரம்

உள்ள 50 செண்ட் நிலத்திலும் பாகம் கேட்கப்பட்டுள்ளது, ஏரிக்கரையோரம் உள்ள நிலத்தின் சர்வே எண் தெரியவில்லை.

3. சர்வே எண் 245/1A–வில் உள்ள 50 செண்ட் மற்றும் ஏரிக்கரையோரம் 50 செண்ட் நிலம் ஆதியில் யாருக்கு சொந்தமானது என்றால், திருநாவுக்கரசு என்பவருக்கு சொந்தமான சொத்துக்களை பொது குடும்பத்தின் சார்பாக சீனிவாசன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது. எந்த தேதியில், சீனிவாசன் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்றால், அது பற்றி நினைவில் இல்லை.

4. திருநாவுக்கரசுவிடமிருந்து சீனிவாசன் பெயரில் கிரையம் பெற்ற கிரையப் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால், இல்லை. அந்த கிரையம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியுமா என்றால், தெரியாது. அந்த கிரையத்தின் போது சீனிவாசன் எவ்வளவு கிரையத் தொகை கொடுத்தார் என்று தெரியுமா என்றால், தெரியாது.

5. போடி நாயுடுவிற்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால், 4 மகன்கள், 3 மகள்கள் ஆவார்கள். அதில் 2 மகள்கள் காலமாகிவிட்டார்கள், ஒருவர் உயிருடன் உள்ளார். கோவிந்தராஜ் 45 ஆண்டுகளுக்கு முன்பு காலமானார் என்று சொல்வதால், காலமான தேதி, மாதம், வருடம் தெரியுமா என்றால், நினைவில் இல்லை.

6. சீனிவாசன் நாயுடு எந்த வருடம் அவரது பெற்றோர் மற்றும் உடன்பிறந்தவர்களை விட்டு தனிக்குடித்தம் வந்தார் என்றால், அவர் தனிக் குடித்தனம் வரவே இல்லை, அனைவரும் கூட்டுக்குடும்பாக தான் இருந்தார்கள். இன்று வரை கூட்டுக் குடும்பமாகவே வசித்து வருகிறார்களா என்றால், 10, 15 வருடங்களுக்கு முன்பே தனித்தனியாக போய்விட்டார்கள், ஆனால் சொத்துக்கள் மட்டும் கூட்டாகவே உள்ளது. 2010–ம் ஆண்டு வரை போடி நாயுடுவின் வாரிசுகள் கூட்டுக் குடும்பமாக இருந்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

7. போடி நாயுடுவின் மகன்கள் 4 பேரும் 2010–ம் ஆண்டு வரை கூட்டுக்

குடும்பமாக வசித்து வந்தார்கள் என்பதற்கு நான் ஆவணங்கள் எதுவும் பார்த்தேனா என்றால், இல்லை. போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துக்கள், அவர்களுக்கு மகன்களுக்கு சொந்தமான சொத்துக்கள் அனைத்தும் இன்று வரை பாகம் பிரிக்காமல், கூட்டாக இருந்து வருகிறது என்று சாட்சியம் அளிக்க தான் நான் வந்துள்ளேனா என்றால், ஆமாம்.

8. போடி நாயுடுவின் மகனான சீனிவாசலு நாயுடு 1979-ம் ஆண்டே கூட்டுக் குடும்பத்தை விட்டு தனியாக வந்துவிட்டார் என்றும், எனவே 2010-ம் ஆண்டு வரை போடி நாயுடுவின் மகன்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக வசித்து வந்தாக சொல்வது தவறு என்றால், சரியல்ல.

9. சீனிவாசலு நாயுடு கூட்டுக் குடும்பத்தை விட்டு ஆயர்பாடி கிராமத்தை சேர்ந்த AGR மற்றும் கில் என்பவர்களுக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு பயிர் செய்து சொந்தமான சம்பாதித்து வந்தார் என்றால், அது போன்ற நபர்கள் அங்கு இல்லை. எனவே, பொதுக் குடும்ப வருமானத்தை கொண்டு சீனிவாசலு நாயுடுவின் பெயரில் சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வாதியால் சொல்லப்பட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பொய்யான சங்கதிகள் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME 11.53.A.M.**

YUVARAJ

Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.01.20 14:34:04 +0530